# රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
## அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## Ministry of Public Services, Provincial Councils and Local Government

ඒකාබද්ධ සේවා අංශය | இணைந்த சேவைகள் பிரிவு | COMBINED SERVICES DIVISION

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

දුරකතන தொலைபேசி:(94) 011- 2694560 Telephone

ෆැක්ස් தொலைநகல்:(94) 011- 2692254 Fax

ඊ-මේල් மின்னஞ்சல்:dgcs@pubad.gov.lk E-mail

වෙබ් අඩවිය இணையத்தளம்: www.pubad.gov.lk Web Site


මගේ අංකය / எனது இல / My No: CS/DOS/Policy/01/02

ඔබේ අංකය / உமது இல / Your No:

දිනය / திகதி / Date: 2020.10.20

அனைத்து அமைச்சுக்களினதும் செயலாளர்கள்

திணைக்களத் தலைவர்கள்

மாவட்ட செயலாளர்கள்

பிரதேச செயலாளர்கள்

**2020.01.01 ஆம் திகதியைக் கொண்டதாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நிரந்தர நியமனம் வழங்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் வழங்குதல், தகுதிகாண் கால அறிக்கை வழங்குதல் மற்றும் ஏனைய தாபனச் செயற்பாடுகளை மேற்கொள்ளுதல்**

மேற்படி விடயம் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமானது.

02. 2018.08.20 ஆம் திகதி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பட்டாரிப் பயிலுனர்களை 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் தரம் III இலுள்ள பதவிகளுக்கு நியமித்து 2020.06.17 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட்டுள்ள நியமனக் கடிதங்கள்/ சேவை நிலையத் திருத்தக் கடிதங்கள் மூலம் உமது நிறுவனத்தில் சேவையில் இணைக்கப்பட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவை உத்தியோகத்தர்களுக்கு 2020.06.17 ஆந் திகதி வரை கடமையைப் பொறுப்பேற்க சந்தர்ப்பம் வழங்கப்பட்டது. 2020.06.17 ஆம் திகதியின் பின்னர் வழங்கப்பட்ட நியமனக் கடிதங்களில் அந்நியமனங்களுக்குரிய கடமையைப் பொறுப்பேற்க வேண்டிய திகதிகள் குறிப்பிடப்பட்டுள்ளன.

03. நாட்டினுள் நிலவிய COVID-19 தொற்றுநோய் நிலைமை மற்றும் அதனுடன் இணைந்த வகையில் விதிக்கப்பட்ட ஊரடங்குச் சட்டம் என்பவற்றின் காரணமாக பெரும்பாலான உத்தியோகத்தர்களால் நியமனம் கிடைத்தவுடனே அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவிகளில் கடமைகளைப் பொறுப்பேற்க முடியாமல் போனதன் அடிப்படையில், உத்தியோகத்தர்களுக்கான சம்பளங்களைச் செலுத்துதல், தகுதிகாண் கால அறிக்கைகளைத் தயாரித்தல் மற்றும் ஏனைய தாபனச் செயற்பாடுகளைச் மேற்கொள்ளுதல் என்பன தொடர்பில் சில நிறுவனங்கள் தொடர்ந்து சந்தேகங்களை கேட்டு வருகின்றன. அதனால் இந்த விடயங்கள் தொடர்பில் இதற்கு முன்னர் வெளியிடப்பட்ட அறிவுறுத்தல்களுக்கு மேலதிகமாக பின்வரும் அறிவுறுத்தல்கள் வெளியிடப்படுகின்றன.

(i) சம்பளங்களைச் செலுத்துதல்

அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/EST/03-05/03/2019 ஆம் இலக்க 2020.01.17. ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ள அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அனுமதியின் அடிப்படையில் இந்த உத்தியோகத்தர்களுக்கு 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளமையினால், மேலே 02 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவியொன்றை உரிய தினத்தில் பொறுப்பேற்ற உத்தியோகத்தர்களுக்கு 2020.01.01 ஆம் திகதி முதல் உரிய சம்பளத்தைச் செலுத்துதல் வேண்டும். அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின் பதவியொன்றுக்கு நியமிக்கப்பட்டு சேவையில் இணைக்கப்பட்ட சேவை நிலையத்தில் அல்லது பின்னர் திருத்தப்பட்ட சேவை நிலையத்தில் இச்சம்பளங்களைச் செலுத்துமாறு பணிவுடன் அறியத் தருகிறேன். அவ்வாறு சம்பளம் செலுத்தும் போது உத்தியோகத்தர்கள் பயிலுநர்களாகப் பணிபுரிந்த முன்னைய சேவை நிலையத்தில் விசாரித்து உத்தியோகத்தர்களுக்குச் செலுத்திய பயிலுநர் கொடுப்பனவுகள் அல்லது சம்பளங்களுடன் செம்மையாக்கம் செய்து நிலுவைச் சம்பளங்களை மாத்திரம் ஒழுங்குவிதிகளுக்கு இணங்கிய முறையில் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(ii) தகுதிகாண் அறிக்கை

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளின் VIII ஆம் அத்தியாயத்தின் 101 ஆம் பிரிவுக்கு இணங்க இந்த உத்தியோகத்தர்கள் தொடர்பில் முதலாம் வருடத்திற்கான மீளாய்வு அறிக்கையைத் தயாரிக்கும் போது அதன் 05 ஆம் பின்னிணைப்பிற்கு இணங்க மீளாய்வு அறிக்கையின் தொடர் இலக்கம் 1.4 இல் நியமனத்தைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடும் போது “ 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் (உரியவாறு கடமையைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடவும்) ஆம் திகதி” எனவும் தொடர் இலக்கம் 1.6 இல் மீளாய்வுக்கு ஏற்புடைய காலத்தைக் குறிப்பிடும் போது “2020.01.01. முதல் நடைமுறைக்கு வரும் வகையில் (உரியவாறு கடமையைப் பொறுப்பேற்ற திகதியைக் குறிப்பிடவும்) ஆம் திகதி முதல் 2020.12.31 ஆம் திகதி வரை” என்றும் குறிபிப்பிட்டு உரியவாறு கடமையைப் பொறுப்பேற்ற திகதி முதல் ஏற்புடைய தகவல்களை மீளாய்வு அறிக்கையில் உள்ளடக்குதல் வேண்டும்.

**உதாரணம்:** “2020.06.15 ஆம் திகதி முதல் அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையில் நியமனத்தைப் பொறுப்பேற்ற உத்தியோகத்தரொருவருக்கான அரச சேவை ஆணைக்குழுவின் செயலொழுங்கு விதிகளின் 05ஆம் பின்னிணைப்பைப் பூர்த்தி செய்தல்

| | | |
|---|---|---|
| 1.4 | நியமனத்தைப் பொறுப்பேற்ற திகதி : | 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2020.06.15 ஆந் திகதி |
| 1.6 | மீளாய்வுக்குரிய காலப் பகுதி : | 2020.01.01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 2020.06.15 ஆந் திகதி முதல் 2020.12.31 ஆந் திகதி வரை |

மேற்குறித்தவாறு குறிப்பிட்டு 2020.06.15 ஆந் திகதி முதல் ஏற்புடைய தகவல்களை பூர்த்தி செய்யுங்கள்''

**<u>(iii) சேவை நிலையம் திருத்தப்பட்டமையினால் சேவைக்கு சமுகமளிக்க முடியாமல் போனமை.</u>**

2020.06.17 ஆந் திகதிக்கு முன்னர் கடமையைப் பொறுப்பேற்ற சில உத்தியோகத்தர்களின் கோரிக்கையின் பேரில் மிகவும் மனிதாபிமான விடயங்கள் மற்றும் ஏனைய அத்தியவசிய விடயங்களைக் கவனத்தில் எடுத்து உத்தியோகத்தர்கள் சேவையில் இணைக்கப்பட்ட சேவை நிலையங்களை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் அவ்வாறு சேவை நிலையங்கள் மாற்றப்பட்ட உத்தியோகத்தர்கள் கொவிட் - 19 நிலைமை, அதன் அடிப்படையில் பிரகடனப்படுத்தப்பட்ட ஊரடங்குச் சட்டம் அல்லது வேறு நிறுவனம்சார் காரணங்களின் அடிப்படையில் கடமைக்குச் சமுகமளிக்க முடியாத சந்தர்ப்பங்களில் அந்த சேவையில் இருக்காத காலத்தை அவர்களின் எதிர்கால கடமைசார் விடயங்களில் அவர்களின் சேவை மூப்புக்கு பாதிப்பு ஏற்படாத விதத்தில் <u>சம்பளத்துடனான லீவு</u> நாட்களாக (உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட லீவு நாட்களிலிருந்து கழிக்கப்படாத விதத்தில்) கருத வேண்டும் என்றும், அக்காலத்திற்குரிய சம்பளங்களை 3 (i) ஆம் பந்தியில் குறப்பிடப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு இணங்க செலுத்துமாறும் பணிவுடன் அறியத் தருகிறேன்.

04. 2020.06.17 ஆம் திகதியின் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்ட மற்றும் அங்கவீனர் பட்டதாரிப் பயிலுநர்களுக்கு 2020 ஜூலை மாதம் 15 ஆம் திகதி நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு இணங்க අමප/20/1044/204/105 ஆம் இலக்க 2020 ஜூலை மாதம் 23 ஆம் திகதி அமைச்சரவைத் தீர்மானம், அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளரின் PSC/EST/03-05/03/2019 ஆம் இலக்க 2020.08.27 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் அறிவிக்கப்பட்ட அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் என்பவற்றுக்கு இணங்க 2020.09.07 ஆம் திகதியைக் கொண்டதாக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவைக்கு நியமனம் வழங்கப்பட்டதுடன், இந்த உத்தியோகத்தர்களுக்கும் 2020.01.01 ஆம் திகதி முதல் சம்பளம் செலுத்த வேண்டி ஏற்படுவதுடன் சம்பளங்களைச் செலுத்துதல் மற்றும் தகுதிகாண் அறிக்கைகளைப் பெறுவது தொடர்பில் மேலே 03 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட அறிவுறுத்தல்களை ஏற்புடையதாக்குமாறும் மிகவும் பணிவுடன் அறியத் தருகின்றேன்.

05. அத்துடன், 2020.01.01 ஆம் திகதியின் பின்னரான ஒரு திகதியில் நியமனம் நடைமுறைக்கு வரும் என நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில், அந்த உத்தியோகத்தர்களுக்கு சம்பளங்கள் செலுத்துதல் மற்றும் தகுதிகாண் அறிக்கைகளைத் தயாரிக்கும் போது நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியை ஏற்புடையதாகக் கொள்ளுமாறும் அறியத் தருகின்றேன்.

ஒப்பம்./ எஸ். ஆலோகபண்டார

இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகம்